## நீலன் திருச்செல்வம் நம்பிக்கை நிதியம்

## முன்மொழிவுகளுக்கான விண்ணப்பங்களைக் கோருதல்
## "பாதிப்புறுநிலையிலுள்ள சமுதாயங்களை வலுவூட்டுதல்"
## CALL NO: NTT/NOV/2017/02

நீலன் திருச்செல்வம் நம்பிக்கை நிதியம் அதன் 2017 நவம்பர் நிதியிடல் சுற்றின் கீழ் உதவி வழங்குவதற்காக **"பாதிப்புறுநிலையிலுள்ள சமுதாயங்களை வலுவூட்டுதல்"** கருத்திட்ட முன்மொழிவுகளைத் தற்போது ஏற்றுக்கொள்கின்றது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது. விண்ணப்பங்களைக் கோரல் இல:: **NTT/NOV/2017/02**

### பின்புலம்

இலங்கையின் அறக்கொடை நிறுவனங்களில் ஒன்றான நீலன் திருச்செல்வம் நம்பிக்கை நிதியம் (வேுவு) சமூகநீதி, சமாதானம் மற்றும் நல்லிணக்க முன்னெடுப்புகளுக்கு உதவி வழங்கிவருகின்றது. அஹிம்சை வழிகள் மூலம் சமாதானத்தைக் கட்டியெழுப்பக் கடினமாக உழைத்த இலங்கையின் சட்டவாக்குனரும் அரசியலமைப்புருவாக்கப் புலமையாளரும் சமாதான உருவாக்குனரும் நிறுவன உருவாக்குனருமான கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் படுகொலையினைத் தொடர்ந்து நம்பிக்கை நிதியம் 2001ல் உருவாக்கப்பட்டது. நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மனித உரிமைகளை நிலை நிறுத்துவதற்கு உதவி வழங்குவதற்காகவும்இ வெளிப்படைத்தன்மை மற்றும் வகைப் பொறுப்பினைப் பேணுவதற்கு உதவி வழங்குவதற்காகவும்இ பன்மைவாதத்தினை வளர்ப்பதற்காகவும்இ பல்வகைமை மற்றும் இன நல்லுறவினை வளர்ப்பதற்காகவும் பெரும் பணியாற்றி வருகின்றது. இந்த நோக்கத்துடன் நாடு முழுவதுமுள்ள சிவில் சமூக நிறுவனங்களுக்கு நிதியம் நன்கொடைகளை வழங்கி அவற்றின் ஆற்றலை வலுப்படுத்தி வருகின்றது. சமாதான உருவாக்கத்திற்கான ஒரு வழியாக கலை கலாசாரங்களுக்கு உதவுகின்ற நீண்டகாலக் கீர்த்தியினையும் நிதியம் கொண்டுள்ளது.

### முன்மொழிவுகளைக் கோருவதன் குறிக்கோள்

அரசாங்கத்தின் கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் சமுதாயத்தின் தேவைகளுக்கு செயற்திறன்மிகு முறையில் பதிலாற்றுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காக உள்ளூர், பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் பங்குதாரர்களுடனான செயற்திறன்மிக்க ஈடுபாட்டினை இயலுமாக்குவதற்காகவும் ஆளுகையிலும் கொள்கை விடயங்களிலும் பிரசைகளின் பங்கேற்பினை வலுவூட்டுவதற்காகவும் சிவில் சமூக முயற்சிகளையும் சமுதாய முயற்சிகளையும் தனிப்பட்ட ரீதியிலும் கூட்டாகவும் வலுப்படுத்த முன்மொழிவு கோரலை நாடுகின்றது.

### கருத்திட்டங்களின் வகைகள்

சாத்தியமானவிடத்து, பின்வரும் நிகழ்ச்சித்திட்டப் பரப்புக்களினூடாகத் தாக்கத்தினை உறுதிப்படுத்துவற்காக குறுக்கறுக்கும் அணுகுமுறைகளை முன்மொழியுமாறு விண்ணப்பதாரிகள் ஊக்கப்படுத்தப்படுகின்றனர். உதவி வழங்கப்படுகின்ற ஆனால் பின்வருவனவற்றிற்கு மாத்திரம் வரையறுக்கப்படாத கருத்திட்டங்கள் / செயற்பாடுகளின் வகைகள்:

#### நிகழ்ச்சித்திட்டப் பரப்பு 1: உள்ளடங்கலான பொருளாதாரங்கள்

a) யுத்தத்திற்குப் பின்னரான மீளுருவாக்கம் மற்றும் புனரமைப்பு முன்னெடுப்புக்களில் சமூக – பொருளாதார வலுவூட்டலை மேம்படுத்துதல்
b) காணி உள்ளடங்கலாக பொருளாதார வளங்களின் மீதான உரிமைகள் - அல்லது அவற்றின் மறுப்பு பற்றிய ஆவணப்படுத்தல், சொல்லாடல், ஆதரித்து வாதாடல் மற்றும் ஆய்வுகளுக்கு உதவுதல்
c) உள்ளூர் / ஒதுக்கப்பட்ட நிலையிலுள்ள சமுதாயங்களின் உள்ளடக்கும்தன்மை மிக்க மற்றும் அணுகக்கூடிய சந்தைகள், விநியோகச் சங்கிலிகளுக்கு உதவுதலும் அவர்களின் பொருளாதார வாய்ப்புக்களை விஸ்தரித்தலும்
d) வாழ்வாதார உதவி, தொழிற்பயிற்சி, நுண் நிதி ஆகிய பரப்புக்களில் நடைமுறைக் கொள்கைகள், முறையியல்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பீடு செய்தல்
e) சமுதாயங்களின் பொருளாதார வலுவூட்டலில் ஈடுபட்டுள்ள CSOக்களை வலுப்படுத்துதல்

**நிகழ்ச்சித்திட்டப் பரப்பு 2: பால்நிலை முக்கியத்துவம்**

a) பெண்களின் சமவாய்ப்புக்களைப் பாதிக்கின்ற கட்டமைப்பு ரீதியான மற்றும் முறைமை வாய்ந்த காரணிகளைத் தீர்த்தல், வெவ்வேறு கொள்கைகளின் உள்ளடக்கத்தில் பால்நிலைக் கண்ணோட்டத்தினை உள்ளடக்க வாதாடும் முன்னெடுப்புக்களுக்கு உதவுதல், யுத்தத்திற்குப் பின்னரான புனர்வாழ்வு தொடர்பில் பங்கேற்பு தொடர்பான விடயங்களைத் தீர்த்தல்

b) பால்நிலை அடிப்படையிலான வன்முறையினைத் தீர்க்கும் சேவை வழங்கல், ஆதரித்து வாதாடல், சொல்லாடல் மற்றும் பரிகார முறைமைகளுக்கு ஆதரவு வழங்கல்

c) சமுதாயங்களின் வாழ்வினை மேம்படுத்தும் தீர்மானம் வகுத்தல் மற்றும் நடைமுறைச் செயற்பாடுகள் ஆகியவற்றிற்கு உதவும் நோக்கத்துடன் தொழில்வாய்ப்பு, காணி மற்றும் வளங்களிற்கான பெண்களின் உரிமைகள் பற்றிய சொல்லாடல், ஆதரித்து வாதாடல் மற்றும் ஆய்வுகளுக்கு உதவுதல்

d) சமுதாய வாழ்விலும் பொதுவாழ்விலும் தலைமைத்துவத்தினையும் பங்கேற்பினையும் வலுப்படுத்த பெண்களுக்கு வாய்ப்புக்களை வழங்கல்

**நிகழ்ச்சித்திட்டப் பரப்பு 3: விளிம்பு நிலையிலுள்ள சமுதாயங்களின் உரிமைகளை வலுப்படுத்தல்**

a) சமத்துவம், ஒப்புரவு மற்றும் சமூக நீதி ஆகியவற்றினை மேம்படுத்தும் நோக்கத்துடன் பரவின நுண் நிலைப் பொருளாதாரக் கொள்கைகளுக்கான ஆதிக்கமிகு அணுகுமுறைகளைத் திறனாய்வு செய்கின்ற கல்வி மற்றும் கொள்கைச் சொல்லாடல்கள், ஆதரித்து வாதாடல்கள் மற்றும் ஆய்விற்கு உதவி வழங்கல்

b) சமுதாயங்களின் உரிமைத் துஷ்பிரயோக மீறல்களையும் கூற்றுக்களையும் அடையாளம் காண்பதையும் ஆவணப்படுத்துவதையும் இயலுமாக்குகின்ற முறைமைகளை உருவாக்கி வலுப்படுத்துதல்,

c) உளசமூக ஆற்றுப்படுத்துல் உள்ளடங்கலாக சட்ட உதவிக்கும் சேவைகளுக்கும் சிறந்த அணுகலைக் கொண்டிருப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிலையிலுள்ள / பாதிப்புறுநிலையிலுள்ள சமுதாயங்களுக்கு உதவுதல்

d) புலம்பெயர் தொழிலாளர், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் குடும்பங்களின் உரிமைகள் மற்றும் □□□□ புறங்களிலும் கிராமப்புறங்களிலும் ஒதுக்கப்பட்ட நிலையிலுள்ள / பாதிப்புறு நிலையிலுள்ள சமுதாயங்களின் மனித உரிமைகள், நீதி, கருத்து சுதந்திரம், தகவலறியும் உரிமைகளை ஊக்குவித்தல்

e) வலுவிழந்தோர் உரிமையைப் பாதுகாத்தல் - தகவல்களையும் வசதிகளையும் அணுகல், அவர்களின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு, அங்கவீனமான நபர்களுக்காக வாழ்வாதாரப் பயிற்சி மற்றும் உதவி

f) சமுதாய வாழ்விலும் பொது வாழ்விலும் தலைமைத்துவத்தினையும் பங்கேற்பினையும் வலுப்படுத்த இளைஞர் யுவதிகளுக்கு வாய்ப்புக்களை வழங்கல்.

**நிகழ்ச்சித்திட்டப் பரப்பு 4: தற்போதைய பிரச்சினைகளையும் உருவாகிவரும் பிரச்சினைகளையும் தீர்க்க சிவில் சமூக நிறுவனங்களின் ஆற்றலை வலுப்படுத்தல்**

a) வெவ்வேறு வகையான சேவை வழங்கல் பொறிமுறைகள் பற்றிய அனுபவங்களை (உதாரணமாக பொதுச் சொல்லாடல், ஆய்வு, பயிற்சி, மற்றும் வலையமைப்புருவாக்கம்) வழங்குவதன் மூலம் சிவில் சமூக நிறுவனங்கள் அல்லது தனிநபர் செயற்பாட்டாளர்களின் (விசேடமாகப் பெண்கள்) சமுதாயத்துடனான செயற்திறன் மிகு ஈடுபாட்டிற்கு உதவி வழங்கல்

b) பால்நிலை, இனத்துவம் மற்றும் சமயச் சிறுபான்மையினர் தொடர்பாகப் பணியாற்றும் நிறுவனங்களை இம் மூன்றினையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திச் செயற்படுத்தும் வகையில் வலுப்படுத்துதல்.

c) தேவைகள் மற்றும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்காக மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டப் பரப்புக்களின் பிரச்சினைகள் எவற்றினையாவது தீர்ப்பதற்காக ஆவணங்களை வெளியிடுதல், மொழிபெயர்த்தல் மற்றும் பரப்புதல் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

## தகைமை பெறுவதற்கான தெரிவடிப்படை

விண்ணப்பிக்க விரும்புவோர் மேற்குறிப்பிட்ட தொனிப்பொருள் சார் நிகழ்ச்சித்திட்டப் பரப்பிற்கு அமைவாக முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். கருத்திட்டங்கள் எவ்வித புவியியல் ரீதியான தடைகளுமின்றி இலங்கையின் எப்பகுதியிலும் அமுல்படுத்தப்படலாம். உபகொடை வழங்க அனுமதிக்கப்படாது. உத்தேச செயற்பாடுகள் தம்மால் நிறைவேற்றப்படும் என்பதையும் அவை மூன்றாம் தரப்பொன்றிற்கு வழங்கப்படமாட்டாது என்பதையும் விண்ணப்பதாரிகள் தெளிவாக எடுத்து விளக்கவேண்டும் (விதிவிலக்காக, சில குறிப்பிட்ட செயற்பாடுகளுக்காக உபஒப்பந்தம் வழங்கப்படவேண்டியவர்களுள் வளப்பகிர்வாளர்கள், மதியுரைஞர்கள் அல்லது மூன்றாம் தரப்பு நிபுணர்கள் ஆகியோர் அடங்குவர்)

நிறுவனம் ஒன்றிலிருந்து ஒரு விண்ணப்பம் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும் (தனியாக விண்ணப்பித்தல் அல்லது ஒரு நிறுவனத்துடன் பங்காண்மைடன் விண்ணப்பித்தல்).

- தகைமையுடைய பயனாளிகளுள் முறையாக பதிவுசெய்யப்பட்ட சமுதாய மட்ட நிறுவனங்கள், உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்நாட்டு இலாப நோக்கற்ற நிறுவனங்கள் அடங்கும்
- தனிநபர்களிடமிருந்தான கொடை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
- செல்லுபடியாகத்தக்க பதிவின்றிய நிறுவனங்கள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது (விதிவிலக்காக செல்லுபடியாகக்கூடிய பதிவுடைய வேறொரு நிறுவனத்துடன் பங்காண்மையுடன் விண்ணப்பதாரி விண்ணப்பித்தால் கருத்திற்கொள்ளப்படும்). அந்த நிறுவனம் இந்த விண்ணப்பத்திற்கான சகல தகைமை அடிப்படையினையும் பூர்த்தி செய்யவேண்டும்.
- ஏற்கனவே நிதியத்துடன் கொடை ஏற்பாட்டினைக் கொண்டுள்ள நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம் ஆனால் தற்போதைய கொடையினைத் திருப்தியாகப் பூர்த்தி செய்தால் மாத்திரமே விண்ணப்பம் மீளாய்வு செய்யப்படும்.
- நிதியத்தினால் அல்லது வேறு கொடையாளர்களினால் நிதியளிக்கப்பட்ட முன்னைய கருத்திட்டங்களை அமுல்படுத்துவதில் சிறந்த செயலாற்றுகையினைக் காட்டாத நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படமாட்டாது.
- அரசாங்க நிறுவனங்கள் அல்லது திணைக்களங்கள் அனுப்பிவைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அரசியல் தொடர்புடைய நிறுவனங்களுக்கு நிதியளிக்கப்படமாட்டாது.

## கொடைத் தொகையும் கருத்திட்டக் கால அளவும்

வேண்டப்படும் ஆகக்குறைந்த தொகை 1,000,000.00 இலங்கை ரூபாவாக இருக்க முடியும். ஆகக்கூடுதலான தொகை 5,000,000.00 ரூபாவினை மிகைக்க முடியாது. ஆகக்குறைந்த கொடைக் கால அளவு 12 மாதங்களாகும். மேலும் ஆகக்கூடியது 24 மாதங்களாகும். விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் ஆகக்கூடிய தொகை அத்துடன் / அல்லது கொடைக் கால அளவினைப் பரிசீலிப்பதற்கான உரிமையினை நிதியம் கொண்டுள்ளது. 3,000,000.00 ரூபா முதல் - 5,000,000.00 ரூபா வரையில் வேண்டும் விண்ணப்பங்கள் ஆரம்பத்தில் கருத்தியல் பத்திரத்தினை மட்டும் சமர்ப்பிக்க வேண்டும்.

## விண்ணப்ப வழிகாட்டல்களும் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவும்

விண்ணப்பங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தட்டச்சு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படலாம். கருத்திட்டங்கள் 2018 பங்குனி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கலாம். விண்ணப்பங்கள் நிதியத்தின் முறைவடிவத்தில் மாத்திரமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேறு வடிவங்களிலான சமர்ப்பணங்கள் நிராகரிக்கப்படும்.

சம்பந்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள சகல ஆதார ஆவணங்களுடனும் உரிய முறையில் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். பூரணமற்ற விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது (தேவையான ஆதார ஆவணங்களின்றி).

சகல விண்ணப்பங்களும் grant.applications@neelan.orgக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (தயவுசெய்து **NTT/NOV/2017/02 எனக் குறிப்பிட்டு விடயப் பரப்பிபில் விண்ணப்பதாரியின் பெயரினை எழுதவும்).**

தபாலிலோ அல்லது கூரியரிலோ அனுப்பப்படும் அல்லது நேரில் கையளிக்கப்படும் சமர்ப்பணங்கள் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், நீலன் திருச்செல்வம் நம்பிக்கை நிதியம் (NTT), 16/6A, வாட் பிளேஸ், (மொஹிடீன் டெரஸ்), கொழும்பு 7 என முகவரியிடப்பட வேண்டும். வெளி உறையில் விண்ணப்பதாரியின் பெயர் தெளிவாகப் பின்வரும் இலக்கத்துடன் எழுதப்படல் வேண்டும். **NTT/NOV/2017/02.**

**மின்னஞ்சல் மற்றும் வன்பிரதி ஆகிய இரண்டினையும் அனுப்பவேண்டாம். ஒன்று போதுமானது.**

ரூபா **3,000,000 வரையான விண்ணப்பங்கள்:**

- காலக்கெடு: 2 தை மாதம் 2018, உள்ளூர் நேரம் 16:00ற்குப் பிந்தாமல்.
- விண்ணப்பப் படிவத்தினைப் பதிவிறக்க: http://neelan.org/download-forms/
- முன்மொழிவு தொடர்பான சந்தேகங்களுக்கு மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ள: grant.applications@neelan.org 2017 மார்கழி மாதம் 5ற்குப் பிந்தாமல். தொலைபேசி மூலமான விசாரணைகளுக்குப் பதிலளிக்கப்படமாட்டாது

ரூபா **3,000,000 –** ரூபா **5,000,000 வரையான விண்ணப்பங்கள்: கருத்தியல் பத்திரங்கள் மாத்திரம்**

- விண்ணப்ப முடிவுத் திகதி: 20 **மார்கழி** மாதம் **2017**, உள்ளூர் நேரம் 16:00ற்குப் பிந்தாமல்.
- விண்ணப்பப் படிவத்தினைப் பதிவிறக்க: http://neelan.org/download-forms/ (முதற்சுற்றில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் பூரண முன்மொழிவினைச் சமர்ப்பிக்க அழைக்கப்படுவர்)

- முன்மொழிவு தொடர்பான சந்தேகங்களுக்கு மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ள: grant.applications@neelan.org 2017 மார்கழி மாதம் 5ற்குப் பிந்தாமல். தொலைபேசி மூலமான விசாரணைகளுக்குப் பதிலளிக்கப்படமாட்டாது

சமர்ப்பித்த விண்ணப்பங்கள் தொடர்பாக நிதியத்தினைத் தயவுசெய்து தொடர்புகொள்ள வேண்டாம்.

**நம்பிக்கை நிதியத்தின் தீர்மானங்கள் இறுதியானவையாகும்**